தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு

துணர் ருச	திருவள்ளுவர் யாண்டு உ௰கக இரௌத்திரி கார்த்திகை 1980 நவம்பர் - திசம்பர்	மலர் அ

தொல்காப்பியமும்
நடையியலும்

பா. வீரப்பன் எம். ஏ., எம். பில்., டிப். மானிடவியல்

1. 0. உலகின் மூத்த மொழிகளுள் ஒன்று தமிழ். இதனுடன் ஒத்தனவாகக் கொள்ளத்தக்கன கிரேக்கமும், வடமொழியும், தொல்காப்பியர் நடைபற்றிக் கருதுவதைக் காணுமுன்னர்க் கிரேக்க வடமொழிக் கருத்துக்களைக் காண்பது பயன் தரும்.

1. 1. கிரேக்க நாட்டில் அரிஸ்டாட்டிலின் காலத்திலேயே இலக்கிய நடைபற்றிய ஆய்வினைக் காணுகிறோம். கிரேக்க நாட்டில் அரிஸ்டாட்டில் (330 கி. மு) பிளாட்டோ (365 கி. மு.) இருவர் கருத்துக்களையும் பின்பற்றிய இருவேறு கோட்பாடுகள் உண்டு. ஒன்று நடை என ஒன்று உண்டு அல்லது இல்லை என்பது. இரண்டாவது நடை என ஒன்று எழுதும்போது உண்டு எனக் கொண்டு அது சிறந்ததா இல்லையா எனக் காண்பது. 1

1. 1. வடமொழியில் வாமனரின் வருகையே நடை ஆய்வினை அம்மொழியில் கொணருகிறது. கவிதையின் உயிர்த்துடிப்புக்களைக் பாகுபடுத்திக் காட்டிய அவர் சொல்லோசையும், பொருளுமே கவிதையின் அமைப்பு என்றார். நடையைக் குறிக்க அவர் கையாண்ட சொல் 'ரீதி' என்பதாகும். ரீதி என்றால் குறிப்பிட்ட முறையில் சொற்களை அமைப்பது எனலாம் 2 எனினும் இது 'Style' எனும் ஆங்கிலச் சொல்லால் நாம் குறிப்பிடும் முழுப் பொருளையும் தருவதாகக் கொள்ளுதல் இயலாது.

1. 2. தமிழின் மூத்த நூலாகிய தொல்காப்பியம் நடைபற்றிய கருத்துக்களைத் தரத் தவறவில்லை 'Style' என்று நாம் வழங்கும்

சொல்லின் முழுப்பொருளையும் உள்ளடக்கிய 'நடை' எனுஞ் சொல்லை உலகில் முதன் முதலில் கையாண்டவர் தொல்காப்பியரே என்பது இவ்வாய்வாளனின் முடிவாகும்.[3]

1.8. இன்றும் நடையின் இயல்புகளைச் செவ்வகைப் புரிந்து கொள்ளச் சிலரால் இயலவில்லை அதற்குக் காரணம் மொழியினையும் நடையினையும் ஒன்றெனக்கொண்டு மயங்குதலே எனல் தகும்.[4] எனவேதொல்காப்பியத்தில் உள்ள நடையியல்பற்றிய கருத்துக்களை இன்றைய நடையியலாரின் துணைக்கொண்டு.தொகுத்துக்கூறமுயலு வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

2.0. நடையியல் என்ற ஒருதுறை இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கிய ஒன்றே. அறிவியல் வழியில் மொழியாய் வினைத் தொடக்கிய புளூம்பீல்டு (1933) நோவம்சாம்ஸ்கி (1957) இருவரும் இதற்கு அடிப்படையானவர்கள் மொழியியல் ஆய்வினை, இலக்கியத் திறனாய்வாளர்களால், விளக்க இயலா நிலையிலிருந்த நடையினை விளக்கப் பயன்படுத்திய பெருமை சார்லஸ் பாலீ என்ப வரையே சாரும்.

2.1. புளூம்பீல்டு தந்த மொழியியல் முறையினைக் கொண்டு மொழியில் உள்ள பாதிப்புக் கூறுகளே அமைபற்றிய ஆய்வே நடை யியல் என்றார் சார்லஸ் பாலி, அவரைத் தொடர்ந்து வந்த ஹாக்கெட் போன்றோர் மொழி அமைப்பில் வேறுபட்டு ஒரே பொருளைத் தரக்கூடிய தொடர்களை மாறுபட்ட நடை உடையன என்றனர். இவர்களின் ஆய்வு பொதுப்பண்பு (langue) தனிப்பண்பு (parole) இரண்டிற்குமுள்ள வேற்றுமைகளை ஆய்வது.[5] இம் முறையினைப் பின்பற்றுவோர் ஒலிநிலை, சொற்கள், தொடர்கள் எனும் நிலையில் நடையியல் ஆய்வினை மேற்கொள்வர். இதனைக் கொண்டு பார்க்கும்போது கவிஞன் தனது படைப்பினை ஆக்கும் போது மூவகை நிலையில் கவனம் செலுத்துகிறான். முதலாவதாக தான் சொல்ல நினைக்கிற கருத்துகளுக்கு — தனது எண்ணத்திற்கு —உணர்ச்சிகளுக்கு ஏற்ற சொற்களைப்பெய்கிறான். இரண்டாவதாக, இச்சொற்களைத் தான் எண்ணுகின்ற அளவிற்கு முழு வெற்றி கிட்டும் வகையில் தொடரியல் மரபுகளுக்கேற்பச்சொற்களை அமைக் கின்றான். மூன்றாவதுநிலை அவ்வாறு அமைக்கின்ற தொடர்கள் கேட்போரைப் பிணிக்கும் தகையவாய் அமைதற்பொருட்டுத் தெளி வும் வேகமும் உடையனவாக அணிகளைப் பயன்படுத்துகிறான். இம் மூன்று நிலையிலும் செயல்படும்போது சிறந்த நடையினைக் கவிஞன் கையாளுகிறான் எனலாம்.

2. 2. சாம்ஸ்கியின் மாற்றிலக்கணக் கோட்பாட்டினைப் பின் பற்றுவோர் தொடரியலுக்கே இன்றியமையாமை அளித்து நடையியல் ஆய்வு செய்வர். மாற்றிலக்கணக் கோட்பாடுகளின்படி மொழியினைக் குறிப்பிட்ட விதித் தொகுதிகளைக்கொண்டு விளக்கி விடுதல் இயலும். இந்த விதிகளை இலக்கணத்தில் சரியான முறையில் அமைப்பதன் மூலம் இலக்கணரீதியான தொடர்களையும் சொற்றொடர்களையும் உருவாக்க இயலும் இவ்வாறு உருவாக்குகின்ற சொற்றொடர் அமைப்புகள் மொழியில் வழங்கும் அனைத்துவகைச் சொற்றொடர்களையும் உள்ளடக்கிய அமைப்புகளாகும். இவற்றை விதிகளாகக்கொண்டு மற்ற சொற்றொடர்களை இற்றினிவன்றும் விலகிய பிறழ்வுகளாகக் கொண்டு நடையினை விளக்குதல் இயலும். இவ்வாறு அமைவதில் எத்தகைய பிறழ்வுகள் ஏற்பட முடியும் என்பதை எட்டு வகைகளாகப் பகுக்கலாம் 6

1. சொல்வழு 2. இலக்கணவழு 3. ஒலிவழு
4. எழுத்துவழு 5. பொருள்வழு 6. கிளைமொழிவழு
7. சூழ்நிலை மொழிவழு 8. வரலாற்றுக்கால வழு

3 0. தொல்காப்பியத்தில் நடை எனும் சொல் பதினேழு இடங்களில் இடம் பெற்றிருக்கின்றது. இவற்றுள் பன்னிரிடங்களில் நூல் நடையினைக் குறிக்கத் தொல்காப்பியர் பயன்படுத்தியுள்ளார். என்பது குறிப்பிடத்தக்கது இந்த பன்னிரிடங்களிலும் அவர் கையாண்டிருக்கின்ற போக்கினை ஆய்ந்து பார்க்கும் போது தொல்காப்பியர் சொற்களின் பொருளுணர்த்தும் திறன், சொல் நடந்து முடியும் போக்கு, சொல்—முறைவைப்பு. ஓசைநயம் எனும் நடைக் கூறுகளைக் கருத்தில்கொண்டு 'நடை' எனும் சொல்லைப் பயன்படுத்தியிருப்பதனை உணரலாம் 7

3: 1. செய்யுளில் இடம் பெறும் சொற்களைக் குறிக்க வந்த தொல்காப்பியர்

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே (சொல். 397)

என்கிறார். இவற்றுள் வடசொற்கள் பயின்று வருகின்ற போது அவை தமிழ் ஒலிக்கு ஏற்ப மாறுந்தன்மையினையும் தொல்காப்பியர் குறிக்கிறார். இந்த சொற்களைத் தொகுத்து நடத்தும் போது வலித்தல், மெலித்தல் விரித்தல், தொகுத்தல். நீட்டல், ஆகியவற்றையும் செய்யுள் நடையில் செய்யலாம் என்கிறார். (சொல்: 403). சொற்களில் மறைத்துக் கூற வேண்டிய சொற்கள் என்பனவற்றை இடக்கரடக்கல் மங்கலம், குழூஉக்குறி எனச்சிலச் சொற்களைச் சொல்வதனையும் காணலாம் (சொல்: 442, 443)

இதனை இன்றைய நடையியலார் Euphomism என்பர். சொற்கள் அடுக்கி வந்து நடை அமைதலும் உண்டு. அது இசையின் போதும், விரைவின் போதும் ஏற்படும். இதற்கு நான்கு முறை என வரம்பு கூறுவார் தொல்காப்பியர். 'இசைப்படுபொருளே நான்கு வரம்பாகும்.' (சொல்: 423) எனும் அவரது கருத்து இந்த நடையின் பகுதியே எனக்கொள்ளலாம். இதைப்போல இன்றைய நடையியலாரின் Neologism எனும் கூற்றினைக் 'கடிசொல் இல்லைக் காலத்துப் படினே' (சொல். 452) என்னும் நூற்பா உணர்த்துகின்றது. அதே போன்று செய்யுள் படைக்கும் போது சில சொற்களைச் செய்யுள் நடையில் குறைத்தும் ஆளப் புலவனுக்கு உரிமை உண்டு. இதனை சொல்லதிகார 453ஆம் நூற்பா உணர்த்துகின்றது.

3 2. சொற்கள் தொடர்ந்து நடந்து அமையும் விதங்களை ஆங்காங்கே சுட்டிச் செல்கின்றார் தொல்காப்பியர். அவற்றுள் சில

அடைசினை முதல்என முறைமூன்றும் மயங்காமை

நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல் (சொல். 26:

முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே (சொல்: 39)

இறுதியும் இடையும் எல்லா வுருபும்

நெறிபடு பொருள்வயின் நிலவுதல் வரையார் (சொல்: 103)

இடையெனப் படுப பெயரொடும் வினையொடும்

நடைபெற் றியலும்; தமக்கியல் பிலவே (இடையியல்: 1)

இந்நூற்பாக்கள் சொற்களின் வைப்பு முறைபற்றிய தொல்காப்பியரின் அறிவுக்கு அவர்காணும் நடைக்குச் சான்றாக அமைகின்றன

3. 8. சொற்கள் நடந்து முடியும் போது சொற்றொடர்கள் (Phrases) முற்றுத்தொடர்கள் (Sentence) ஆகின்றன. இங்கு எவ்வாறு சொற்கள் சில இடங்களில் முடிவுகொள்ள வேண்டும் என்பதனையும் தொல்காப்பியர் சுட்டுகின்றார் சில எடுத்துக்காட்டுகள்:

எல்லாத் தொகையும் ஒரு சொன் னடைய (சொல்: 420)

உயர்திணை மருங்கி னும்மைத் தொகையே

பலர்சொன் னடைத்தென மொழிமனார் புலவர் (சொல்: 421)

பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்

அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே (சொல்: 51)

உருபு தொடர்ந்தடுக்கிய வேற்றுமைக் கிளவி

ஒரு சொன் னடைப பொருள்சென் மருங்கே (சொ. 102)

'ஒரு சொன்னடைய (420) என்பதற்கு விளக்கம் தரும் தெய்வச் சிலையார், ஒட்டுப் பெயர் ஒரு சொன்னடைத்து என்றால் அமையாது பலசொல் நடைத்தாகியுஞ் சிலசொல் வருதலின் எனின் ஆண்டும் ஒருசொன்னடைத்தென்பதே கருத்து. ஒருவர் என்பது பன்மைவினை கொண்டு முடிந்தாற்போல உயர்திணை ஒட்டும் பெயர் பன்மைவினை கொண்டு முடியுமெனச் சொன்ன முடிவு நோக்கிக் கூறினாரெனக' என்பது சொல் நடந்து முடிதலையே குறிக்கின்றது.

இதேபோன்று 'முன்னிலை குறித்து நின்ற ஒருமைச்சொல், பன்மையொடு முடிந்ததாயினும், வரையப்படாது; அம்முடிவு ஆற்றுப்படை செய்யுளிடத்துப் போற்றியுணரப்படும்' (சொல். 462) எனும் கருத்தினையும் தொல்காப்பியர் தருகின்றார்.

3. 4. 0. நடையின் சிறப்பான பகுதியாவது ஓசை என்பது தொல்காப்பியரின் கருத்தாகலாம். அதனாலேயே ஓசையினையே நடை எனக் குறிப்பிடுகின்றார்;

ஆசிரிய நடைத்தே வஞ்சி ஏனை
வெண்பா நடைத்தே கலியென மொழிப (சொல்: 104)

இதனையே பா என்பதற்கு விளக்கம் தர வந்த உரையாசிரியர் 'பா என்பது சேட்புலத்திருந்த காலத்தும் ஒருவன் எழுத்துஞ் சொல்லும் தெரியாமற் பாடமோதுங்கால், அவன் சொல்கின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுளென்று உணர்தற்கேதுவாகிப் பரந்து பட்டுச் செல்வதோர் ஓசை (சொல்: 313) என்றார்;

3. 41. இத்தகு ஓசை விகற்பத்தினையே வண்ணம் எனக் குறிப்பிடுகின்றார் தொல்காப்பியர். வண்ணமென்று ஒரு பாவின் கண் நிகழும் ஓசை விகற்பம் என்பர். எனவே தொல்காப்பியர் கூறும் இருபதுவகை வண்ணங்களும் (பொருள்: 524) வேறுபட்ட நடை வகைகளே எனக் கொள்ள இடம் தருகிறது.

4. 0. தொல்காப்பியர் கூறும் பொருள்கோள்

நிரல்நிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்று
அவை நான் கென்ப மொழிபுணர் இயல்பே

[சொல்: 404]

என நான்கு வகையாக அமைகின்றது. இவ்வாறு பலவகைகளில் பொருள்கொள்ள வழிதரும் மொழிப்புணர்ச்சி நடையியலில் தொடரியலின்பாற் படுமெனக் கொள்ளுதல் தகும். செய்யுள்நடை சொற்கள் ஒன்றுகூடி அமையும் தொடர்நிலையிலும், பிற பேச்சுநடை,

உரைநடைகளிலிருந்து வேறுபட்டு வரல் உண்டு, இதனைத் தொல்காப்பியர்ஓரிடத்தில் 'செய்யுள் கண்ணிய தொடர்மொழி' [உயிர் மயங்கியல்] என்று குறிக்கின்றார்.

5. 0. "மொழியில் அழுத்தத்தையும் தெளிவையும் உருவாக்க முயலும் எல்லா வழிவகைகளையும் மொழி நடையியலிற் கீழ் அடக்கலாம். இவற்றில் எல்லா மொழிகளிலும் — புராதன மொழியிலும் கூட — ஊடுருவிச் செல்லும் உருவகங்களும் எல்லா அணி உருவங்களும் சொற்றொடர் அமைப்பும் அடங்கும்" என்பார் ரெனிவலக்[8] இவ்வகையில் நோக்குகையில்,

> இறைச்சிப் பொருள்வயின் செய்யுளுட் கிளக்கும்
> இயற்பெயர்க் கிளவி யுயர்திணை சுட்டா
> நிலத்துவழி மருங்கின் தோன்றலான [சொல்: 196)

என்று கூறப்படும் இறைச்சியும் உள்ளுறையும் வேறுபட்ட வகையில் உணர்த்தும் திறன் பெற்றிருப்பதால் இவையும் நடையின் கூறுகளாகவே அடங்கும்.

6.0: தொல்காப்பியர் செய்யுளியலில் எட்டுவகை வனப்பினைக் குறிக்கின்றார். இவை பெரும்பாலும் தொடர்நிலைச் செய்யுள்களுக்கே உரியன என்பது உரையாசிரியர்கள் கருத்து. இதனை மறுத்து மற்ற கூறுகள் பாடலின் தனிநிலைக் கூறுகளாக அமைய வனப்பெட்டும் முழுநிலைநோக்காக அமைகின்றதுஎன்றும் கொள்ளலாம்[9] இவ்வாறு கொண்டால் வனப்பெட்டும் நடைவகைகளைக் குறிப்பதாகக்கொள்ள இடந்தருகின்றது,

7, 0 மேற்குறிப்பிட்ட கருத்துகளைக் கொண்டு பார்க்கையில் தொல்காப்பியர் சொற்கள் அவை தொடர்ந்து நடந்து முடியும் போக்கு ஓசைநயம் என்பனவற்றொடு அணிகளாகிய உள்ளுறை இறைச்சியும் நடையின் கூறுகள் எனக்கொண்டார் என்று கொள்ள இடம் இருக்கின்றது. அவ்வாறு கொண்டால் தொல்காப்பியரின் நடையியல் கருத்துகள் பெரும்பான்மையும் அமைப்பு மொழியியலாளரின் அடியொற்றிய நடையியல் கருத்துகளோடு ஒப்புமையுடையனவாகின்றன எனக் கொள்ளுதல் இயலும்.

குறிப்பு :—

1. Josepb T. Shipley, Dictionary of World Literary Terms, (London 1970), P. 314.

2. கதிர் மகாதேவன், ஒப்பிலக்கிய நோக்கில் சங்ககாலம், (மதுரை 1977), ப. 153.

3. பா. வீரப்பன், 'நடை—சில குறிப்புகள்', ஆசிரியர் — மாணவர் கருத்தரங்கக் கட்டுரை, சென்னைப் பல்கலைக் கழகம்.

4. ஜெ. நீதிவாணன், நடையியல், (மதுரை 1997) ப, 2.

5. Maurice Leroy, Main trends in Linguistics, Glanville Price (trans.). (LosAngels 1967) p. 132.

6. Geoffrey N. Leech, A Linguistics Guide to English Poetry, (London 1969), pp. 42—52.

7. விரிவுக்குக் காண்க: 'தொல்காப்பியத்தில் நடை — சொல்லாட்சி' எனும் இவ்வாசிரியரின் கட்டுரை.

8. எல். குளோரியா சுந்தரமதி (மொழி) இலக்கியக் கொள்கை (சென்னை 1966) ப. 262.

9. 'வனப்பிலக்கியமும் இலக்கிய வனப்பும்', செந்தமிழ்ச் செல்வி சிலம்பு: 37 பரல் 6, 27,

---

எழுது கருவிகள்

அ. ம. சத்தியமூர்த்தி எம். ஏ., எம்.ஃபில்., பி. ஜி.
டிப்-இன்-மேனுஸ்கிரிப்ட்
உலகத் தமிழ் ஆராய்ச்சி, நிறுவனம், அடையாறு, சென்னை—26.

முன்னுரை :

எழுதக் கற்றுக்கொண்டமை மனிதனது அறிவு வளர்ச்சியின் முதிர்ந்த நிலையாகும். இவ்வாறு எழுதுமிடத்து எழுதப்படு பொருள்கள், எழுது பொருள்கள், எழுது கருவிகள். முதலியன காலத்திற்குக் காலம் வளர்ந்தும். இடத்திற்கிடம் வேறுபட்டும் இருந்து வந்தமையை வரலாறு உணர்த்தும். இவற்றுள் எழுது கருவிகள் பற்றி ஓரளவு விளக்கியுரைப்பதே இக்கட்டுரை.

அயல்நாடுகளில் எழுதுகருவிகள் :

கி. மு. 2000 ஆண்டுகளுக்கு முன்பே எகிப்தியர் நைல் நதிக் கரையில் வளர்ந்த நாணற் குச்சிகளை எழுதுகருவிகளாகப் பயன்படுத்தினர். சீனர் மூங்கிற் பத்தைகளின் மேல் கூரான கருவிகொண்டு தமது எழுத்தை எழுதி வந்தனர். மேலும் சீனர்கள் பட்டுத் துணியிலும் எழுதி வந்திருக்கின்றனர். 1

தமிழகத்தில் எழுதுகருவிகள் :

இந்தியாவில் பலவிடங்களில் எழுதுகருவிகளாக எழுத்தாணிகளே இருந்து வந்திருக்கின்றன. தமிழகத்திலும் எழுத்தாணியே மிகப் பழங்காலத்திலிருந்து அண்மைக்காலம் வரை எழுதுகருவியாக இருந்து வந்திருக்கிறது.

சங்கப் பாடல்கள் அனைத்தும் அவை தோன்றிய காலத்தில் வாய்மொழிப் பாடல்களாகவே இருந்திருக்க வேண்டும் என்பது ஒரு கருத்து. அதனையடுத்துப் பனை யோலைகளில் எழுத்தாணி கொண்டு எழுதத் தொடங்கியிருக்கின்றனர்.

மாதவி தன்னைப் பிரிந்து சென்ற கோவலனுக்குப் பித்திகையின் முகையை எழுத்தாணியாகவும் செம்பஞ்சுக் குழம்பை எழுது பொருளாகவும் கொண்டு தாழம்பூவின் மடலில் எழுதி வசந்தமாலையிடம் கொடுத்தனுப்பினாள் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. 2

சகுந்தலை தாமரை இலையின் பின்புறத்தில் நகத்தால் கீறித் தனது காதல் உணர்ச்சிகளைத் துஷ்யந்தனுக்குப் புலப்படுத்தினாள் என்று சாகுந்தலம் புகல்கின்றது. 3

எழுத்தாணி பற்றிக் குறிப்பிட வந்த ஏலாதி, 'ஊணோடு கூறை எழுத்தாணி' (ஏலாதி. 63) என்று கூறும்

பொன் ஓலையில் பொன் ஊசி கொண்டு

எழுதியதைச் சீவகசிந்தாமணி செப்புகின்றது 4

எலும்பு, பறவைகளின் இறகுகள் முதலியனவற்றையும் எழுதுகருவிகளாகப் பயன்படுத்தியிருக்கின்றனர்.

பழங்காலத்தில் கல்வெட்டுகளில் உளியை எழுதுகருவியாகக் கொண்டு தங்கள் கருத்துக்களைச் செதுக்கியிருக்கின்றனர். செப்பேட்டில் எழுதி வந்தமையையும் காண முடிகிறது.

விரைவின் காரணமாக மேற்கண்ட எழுதுகருவிகள் மனித னுக்கு அதிகப் பயன்தராமல் போகவே பேனா, பென்சில் முதலான எழுதுகோல்கள் அயல்நாட்டாரால் கண்டுபிடிக்கப்பட்டன. இவை இன்று நமது எழுத்துலகில் செய்யும் வித்தைகள் எண்ணற்றவை.

தொகுப்புரை:

ஆகவே எழுதுகருவிகளாக நம்நாட்டிலும், அயல்நாட்டிலும் நாணல்தண்டு, எலும்பு, பறவையின் இறகு, பித்திகையின் முகை, கூரான கருவிகள், எழுத்தாணி, பொன் ஊசி, பேனா, பென்சில் முதலியன பயன்பட்டுள்ளன. நம்நாட்டில் பரந்துபட்ட இடை வெளியை எழுத்தாணி ஆட்கொண்டது போலவே, மற்றொருபெரும் இடைவெளியை 'பேனா' வாகிய எழுதுகருவி அரசு கொள்ளத் தொடங்கியிருக்கிறது.

பின் குறிப்புகள்:

1) சம்பந்தன் மா. சு., அச்சுக்கலை, தமிழர் பதிப்பகம். சென்னை—1, 1976, ப ம். 7.

2) இளங்கோவடிகள், புகார்காண்டம், சிலப்பதிகாரம், கழகம், சென்னை—1, இரண்டாம் பதிப்பு, 1983, வேனிற்காதை, அடி 55.

3) சம்பந்தன் மா. சு., அச்சுக்கலை, தமிழர் பதிப்பகம், சென்னை—1, 1976, ப-ம்: 8.

4) திருத்தக்கத்தேவர், சீவகசிந்தாமணி மூலமும் நச்சினார்க் கினியருரையும், கபீர் அச்சுக்கூடம், சென்னை, ஏழாம் பதிப்பு, 1969, பா. எண்: 369

உந்து புறநானூற்றில் மட்டுந்தானா?

டாக்டர். ஏ. ஆதித்தன்.
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்,

தொல்காப்பியனார் இடையியலின்கண் பல்வேறு வகையான இடைச்சொற்களைத் தொகுத்துக் கூறுமிடத்து 'உம்'மின் திரிபாகிய 'உந்து' எனும் வடிவத்தைச் சுட்டுகின்றார்.[1] சங்க இலக்கியங்களில் ஒன்றான புறநானூற்றில் மட்டும்தான் இவ்வுந்தீற்றுச் சொற்கள் காணப்படுவதாகச் சுட்டப்படும் இலக்கண மரபு நம்மிடையே

உண்டு. ஆனால் பதினெண்கீழ்க்கணக்கினைச் சார்ந்ததா அன்றிப் பதினெண்கீழ்க்கணக்கினைச் சார்ந்ததா அன்றி பதினெண் கீழ்க் கணக்கினைச் சாராததா என்ற கருத்து வேறுபாட்டிற்கு உட்படுத் தப்பட்ட 'இன்னிலை' எனும் இலக்கியத்தில் உந்தீற்று வினைவடிவம் கையாளப்பட்டுள்ளமையினைக் காணமுடிகிறது. இன்னிலையில் காணப்பெறும் உந்தீற்று வினையினை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

உம் உந்தாகும் இடனுமாருண்டே

(தொல்காப்பியம், சொல்லதிகாரம்: 292)

ஈண்டு குறிப்பிடப்பட்டுள்ள இத்தொல்காப்பிய நூற்பாவிற்கு உரையாசிரியர்கள் அனைவரும் புறநானூற்றிலிருந்தே சான்றுகள் தருகின்றனர். சேனாவரையரும், நச்சினியார்க்கினியரும் 'செய்யும்' என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சத்தின் இறுதி உம்மே உந்தாகத், திரிந்துள்ளதெனக் கருதுகின்றனர். [2] புறநானூற்றின் பழையஉரை. யிலும் இத்தகைய வினைவடிவங்கள் அனைத்தும் பெயரெச்சமாகச் செயல்படுவனவாகச் சுட்டப்பட்டுள்ளமையினை அறிய முடிகின்றது. தொல்காப்பியரும் இவ்வுந்தினை முற்று அல்லது எச்சத்தின் ஈறாய் வரும் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை. என்னும் பொருண்மை யில் வரும் 'உம்' எனும் வடிவந்தான் 'உந்து' எனத் திரிந்துள்ள தென இவர் கருதியுள்ளார் என்று கொள்ள இடமுண்டு. எனவே தான் உம்மின் திரிபுகூறும் நூற்பாவினை வினையியலில் அமைக்காது இடையியலின்கண் அமைத்துள்ளார் என்று கூறப்பெறும் கருத்து முறையானதாகத் தென்படுகின்றது. பிற்கால இலக்கணியான பவணந்தி முனிவர் 'செய்யும்' என்னும் வாய்பாட்டுப் பெயரெச் சத்தின் ஈறாகிய 'உம்' எனும் வடிவந்தான் 'உந்து' எனத் திரிந் துள்ளது என்று வெளிப்படையாகச் சுட்டியுள்ளார்.[3]

இவ்வுந்தீற்று வினைகள்பற்றி இலக்கண மொழியியல் அறிஞர்கள் பலர் தம்மிடை முரண்படும் சில கருத்துக்களைத் தெரி வித்துள்ளனர், கே. என். சிவராஜபிள்ளை 'உந்து' என்னும் வடிவம் 'உம்' என்னும் வடிவத்திலிருந்து உருவாகியது அல்ல என்றும் இது 'அந்த'. 'இந்த' போன்ற சுட்டு வடிவங்களைப் போன்று முழுச் சொல் என்றும் குறிப்பிட்டு நிகழ்காலத்தின்கண்ணே இவை வினை யோடு பயன்படுத்தப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுகின்றார். மேலும் இவர் புறநானூற்றில் காணப்பெறும் உந்தீற்று வினைகளை மலையாள மொழியில் காணப்படும் 'செய்யுந்து' அனைய வடிவங்களோடு ஒப் பிட்டு இவை பயனிலைகளாகச் செயல்படும் நிலையினைச் சுட்டு கின்றார்[4] டாக்டர் மு. வரதராசன் இவ்வுந்து வடிவம் 'உம்' 'து' ஆகிய இரண்டனது சேர்க்கையே என்று குறிப்பிடுகின்றார்.[5] டாக்டர்

மோ. இசரயேல் புறநானூற்றில் காணப்படும் உந்தீற்று வினைகளை அஃறிணை ஒன்றன்பால் வினையாலணையும் பெயர்களெனக் குறிக்கின்றார்.[6] டாக்டர் கோதண்டராமன் 'செய்யுந்து' என்னும் வடிவத்திலிருந்துதான் 'செய்யுது' என்னும் வடிவம் கிடைக்கப்பெற்றுள்ளதெனக் கூறுகின்றார்.[7] இனி இன்னிலையின்கண் காணப்பெறும் உந்தீற்று வினையின் பயனிலைப்பாட்டினைக் காணலாம்.

புறநானூற்றில் காணப்பெறும் உந்தீற்று வினைகளெல்லாம் அடுக்கிவர சங்க காலத்திற்குப் பிற்பட்டதாகக் கருதப்படும் இன்னிலையில் இவ்விற்றுவினை தனித்து வருதலைக் காணமுடிகின்றது,

ஒன்றுண்டே மற்றுடலிற் பற்றி வினையிருக்கும்
பொன்று உணர்வால் விலங்கொறுக்க பைம்மறியாத்
தன்பாற் பெயர்க்குந்து பற்று தலைப்பட்டோர்
நன்பால் அறிந்தாச் துறந்தார் வரலுய்ந்தார்
புன்பாலாற் சுற்றப்படார்;

(இன்னிலை: 45)

இப்பாடலில் 'பெயர்க்குந்து' என்னும் வடிவம் பெயரெச்சமாகச் செயல்பட்டு உரையாசிரியர் கருதுவதனைப் போன்று 'பற்று தலைப்பட்டோர்' என்பதனையே தன் அண்மைவுறுப்பாக ஏற்று வருகின்றது. இவ்வுந்தீற்று வடிவத்தினைப் புறநானூற்றில் வரும் வடிவங்களை அறிஞர்கள் குறிப்பிட்டது போன்று வினைமுற்றாகவோ இல்லையேல் வினையாலணையும் பெயராகவோ கருத முடியாது. பெயரெச்சமாகக் கொண்டால் மட்டுமே பொருட்டொடர்பு சிதைவதில்லை,

இதனை அடிப்படையாகக் கொண்டு புறநானூற்றில் காணப்பெறும் இத்தன்மையாய வடிவங்களின் பயனிலைப்பாட்டினை மாற்றியமைக்க முடியுமா? அன்றியும் இன்னிலையின் காலத்தையும் முந்தை இலக்கியங்களோடு தொடர்பு படுத்தலாமா? இவை மேலும் ஆய்வுக்குரியன என்பதில் ஐயமில்லை ?[8]

குறிப்புகள் :—

1. தொல்காப்பியம் சொல்லதிகாரம்—சேனாவரையம்: 292

2. சேனாவரையர், தொல்காப்பியச் சொல்லதிகார உரை: 292
நச்சினார்க்கினியர், தொல்காப்பியச் சொல்லதிகார உரை: 294

3. நன்னூல்: 341

4. கே. என், சிவராஜ பிள்ளை, உந்து என்னும் இடைச்சொற் பிரயோகம் பக்: 46—50

5 மு. வரதராசன், மொழியியல் கட்டுரைகள். பக்:213—215.

6. மோ. இசரயேல், 'உந்தீற்று வினைவுகள்' இடையும் உரியும், பக்: 69—83

7. இரா. கோதண்டராமன் 'திராவிட மொழிகளின் செய்யுந்து வினைகள்' செந்தமிழ்ச்செல்வி, 47: 4 (1972, பக்: 221—232)

7. பதினெண்கீழ்க்கணக்கோடு ஒப்பிட்டு நிகழ்த்தப்பெறும் மொழியாராய்ச்சி இலக்கிய வரலாற்றில் இன்னிலையின் இடத்தினை வரையறை செய்வதற்குப் பயனுடையதாக அமையும்,

---

* இக்கட்டுரை நன்முறையில் அமையப் பல்லாற்றானும் உதவிபுரிந்த என்னுடைய பேராசிரியர் டாக்டர் மோ. இசரேயல் அவர்களுக்கும் தமிழியல்துறை இணைப்பேராசிரியர் டாக்டர் ஜெக. நீதிவாணன் அவர்களுக்கும் நன்றி உரித்தாகுக.

சென்னைப் பல்கலைக் கழகம் தமிழ் இலக்கியத்துறை

ஆசிரியர்-மாணவர் ஆய்வுக் கருத்தரங்கு

30 — 8 — 1980

ஆய்வு :

தொல்காப்பியம் காட்டும் உயர்ந்தோர்—இழிந்தோர்

மாணவர்:- சின். கோதில்மொழியன்.

மேற்பார்வையாளர்:

திருமிகு பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி எம். ஏ, எம். லிட்., பி எச். டி.:

தலைவர், இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

1. 0. தொல்காப்பியத்தில் உயர்ந்தோர் [1] உயர்ந்தோன் [2] இழிந்தோர் [3] இழிந்தோன் [4] என்னும் சொற்கள் காணப்படுகின்றன, இச்சொற்களுக்கு உரையாசிரியர்கள் 'சாதியால் உயர்ந்தவர், சாதியால் இழிந்தவர்' என்று பொருள்கொண்டு அந்தணர், அரசர் வணிகர் ஆகியோரை உயர்ந்தோராகவும் வேளாளரைத் தாழ்ந்தவராகவும் கருதி உரை எழுதியுள்ளனர் [5] இவ்வாறு கொள்ளும் உரையாசிரியர்களின் கருத்துகளுக்குரிய வன்மை

மென்மைகளைத் தொல்காப்பியத்தில் காணும் அகச்சான்றுகளைக் கொண்டு ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

2. 0. 'ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன'[6] என்ற அகத்திணையியல் நூற்பாவிற்கு உரை கூறிய இளம்பூரணர் ஓதற்பிரிவும் தூதிற்பிரிவும் முதலிரண்டு வருணத்தார்க்குரியனவென்றும், நச்சினார்க்கினியர் முதல் மூன்று வருணத்தார்க்கே உரியனவென்றும் கூறியுள்ளனர். 'உயர்ந்தோர்' என்ற சொல்லுக்கு முதல் மூன்று வருணத்தார் என்று பொருள் கூறுவது பொருளுடையதன்று எனலாம்.

2. 1. கல்வி யார்க்கும் பொது. இன்னார்க்கே வேண்டும் என்பதன்று. கல்விக்காகப் பிரியும் பிரிவு மூன்றாண்டுவரை நிகழும் என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்.[4] எனவே இங்குக் கூறப்படும் கல்வி சிறப்புக் கல்வி (Higher Education) ஆகும். இக்கல்வியைப் பெற விழைவோர் பொதுவாகக் காலஓய்வும் செல்வ வளமும் உள்ள தகுதி பெற்றவராகவிருத்தல் வேண்டும்.

2. 2. வேந்துவிடு தொழிலாற் படையும் கண்ணியும்
வாய்ந்தனர் என்ப அவர்பெறும் பொருளே[8]
மன்பெறு மரபின் ஏனோர்க்கு முரிய[9]
மன்னர் பாங்கின் பின்னோ ராகுப[10]

இந்நூற்பாக்கள் வேளாளர் படைத்தலைவராகுஞ் சிறப்பும் குறுநில மன்னராஞ் சிறப்பும் உரியவர் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. இதனால் வேளாளரும் பொருளாதாரத்தில் உயர்ந்தவர்களாக விளங்கியுள்ளனர் என்பதை அறிகிறோம். ஆதலால் ஓதற் பிரிவுக்கு வேளாளரையும் தகுதி பெற்ற உயர்ந்தோராகக் கூறலாம்.

2. 3. வேளாளர் ஓதற் பிரிவுக்கு உடையவர் என்பதால் கல்விச் சிறப்பால் தூது செல்லும் தகைமையையும் பெற்றிருப்பர் எனக் கருத இடமுளது; ஆனால் சமூகத்தில் நிலவிய எல்லா உழவுத் தொழிலாளர்களுக்கும் இது பொருந்துவது என்று கூற முடியாது. மன்னற்குப் படையும் திறையும் சேர்த்தளிக்கும் திறனும் தகுதியும் உடைய செல்வ வேளாளருக்கே இருந்திருக்க முடியும். ஆதலால் உழுதுண்ணும் உழவர்களின்றி உழுவித்துண்ணும் உழவர்களே ஓதலுக்கும் தூதுக்குமுரிய உயர்ந்தோரில் கூறப்பட்டவர் எனலாம். ஆகவே ஆசிரியர் இந்நூற்பாவில் 'உயர்ந்தோர்' என்ற சொல்லை சமூக மரியாதைகளால் உயர்ந்தவர் என்று நினைந்து கூறினாரல்லர். செல்வத்தால் உயர்ந்தோர் என்று எண்ணிச் கூறியதேயாகும்.

3. 1. 'உயர்ந்தோர்க்குரிய ஓத்தினான'[11] என்ற நூற்பாவில் கூறப்படும் 'உயர்ந்தோர்' என்ற சொல்லுக்கு வணிகர் ஒருவரே என்று இளம்பூரணரும், அந்தணர், அரசர், வணிகர், உயர்ந்த வேளாளர் என்று நச்சினார்க்கினியரும் கூறுவர்.

3. 1. 1. இந்நூற்பாவில் பயிலப்படும் 'ஓத்து' என்பதற்கு 'வேதம்' என்று பொருள்கொள்வர் நச்சினார்க்கினியர். அப்படியாயின் வேதநூற்கல்வி என்பது அந்தணர், அரசர், வணிகர், உயர்ந்த வேளாளர் ஆகிய இந்நால்வர்க்கும் மாத்திரம் உரியதென்று கொள்ள முடியாது. முக்காலத்தையும் எண்ணிவுரைக்கும் அறிவரையும் எண்வித நல் ஒழுங்குங் கொண்ட தாபதரையும் தொல்காப்பியர் காட்டுகிறார்.[12]

3. 1. 2. இன்னும் தொல்காப்பியரின் நூற்பாக்களால் எண்ணற்ற புலவர்கள்,[13] ஆசிரியர்கள்,[14] சான்றோர்கள்,[15] பெரியோர்கள்[16] இருந்தனராக அறிகிறோம். ஆகவே, இந்நூற்பாவில் பயிலப்படும் 'உயர்ந்தோர்' என்ற சொல் அறிவும் பொருளும், கல்வியும் ஒழுக்கமும் உடைய பொதுமக்களுள் மேன்மக்களையே சார்ந்து நின்றது எனக்கொள்ளலாம்.

4. 1. 'உயர்த்தோர்' பொருள்வயின் ஒழுக்கத்தான'[17] என்ற நூற்பாவில் நிற்கும் 'உயர்ந்தோர்' என்ற சொல் ஒழுக்கமுடையாரையே குறித்து நிற்றலால் கல்வி நிறைந்தவரையும் செல்வம் நிறைத்தவரையும் ஒழுக்கம் நிறைந்தவரையுமே உயர்ந்தோராகக் கொண்டுள்ளமை தெளிவாகும்.

4. 2. உரையாசிரியர்கள் கருதியதைப் போல தொல்காப்பியர் முதல் மூன்று வருணத்தாரையே உயர்ந்தோர் என்று கருதியிருந்தால் பிறிதோரிடத்தில் ''மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே''[18] என்றதைப் போல '' ஓதலும் தூதும் மூவர்க்கும் உரித்தே''. ''மூவர்க்கும் உரிய ஓத்தினான்'' என்று தெளிவாகவே நூற்பா செய்திருப்பர். அதை விடுத்து உயர்த்தோர் என்று பொதுவாகச் சுட்டியுள்ளதன் காரணம், பொதுவாக எல்லா மக்களுள்ளும் கல்வி, செல்வம், ஒழுக்கம் முதலியவற்றால் சிறந்தவர்களை உயர்ந்தவர்களாகக் கருதியதே எனலாம்.

5. 1. மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க் காகிய காலமும் உண்டே[19]

என்று கூறும் கற்பியல் நூற்பாவில் 'மேலோர்' என்போரை உரை

யாசிரியர்கள் முதல் மூவராகிய அந்தணர், அரசர், வணிகர் என்று கூறுவர். 'கீழோர்' என்போரை வேளாளர் என்பர்.[20] ஆனால், திரு. மறைமலையடிகள், வணிகருள்ளும் உழவருண்டு, உழவருள்ளும் வணிகருண்டு எனக் கொண்டு அவ்விருவரையும் ஒரு பிரிவினராக்கி அவரையே மேலோர் மூவர் என்றும் ஏனைய அடியோர், வினைவலர் போன்ற பதினெண் பிரிவினரை ஒரு பிரிவினராகக் கொண்டு அவரனைவரையும் 'கீழோர்' என்றும் பொருள் கொள்ளுகின்றார்.[21]

5. 2. திரு. சி. இலக்குவனார், இந்நூற்பா நால்வருணப் பாகுபாட்டை உணர்த்துகிறது என்று கூறி இதனை இடைச் செருகல் என்றே தள்ளற்பாலது என்றார்.[22]

5. 2. தொல்காப்பியருக்கு மக்களை நான்கு பிரிவாக்கிக் கூறுவது எண்ணமாதலின் வேளாளரைக் 'கீழோர்' என்றே கொண்டார் எனக்கொள்ளினும் பெரும்பான்மை உழுதுண்ணும் வேளாளரை நோக்கி அவ்வாறு கூறினரேயன்றி, சூத்திரர்' என்று கருதியன்று.[22]

5. 4. மற்றும் இந்நூற்பாவிற்கு வேறொரு முறையிலும் பொருள் கூறலாம். மேலோர், கீழோர் என்பதற்கு உயர்ந்தோர் தாழ்ந்தோர் எனப் பொருள் கொள்ளாது 'மேலே சொல்லிய அந்தணர், அரசர், வணிகர் ஆகிய மூவர்க்கும், கீழே சொல்லிய வேளாளர்க்கும், எனப் பொருள் கொள்ளினும் பொருந்தும். ஏனெனில் படைக்கலனுக்குரியவர் அரசரும் வணிகருமாத்திரமே என்பதைக் கூறவந்த ஆசிரியர்,

> இடையிரு வகையோர் அல்லது நாடின்
> படைவகை பெறுஅர் என்மனார் புலவர்[24]

என்னும் மரபியல் நூற்பாவில் அந்தணர், அரசர் வணிகர், வேளாளர் ஆகிய நால்வரையும் வரிசை முறையால் 'இடையிரு வகையினர்' என்று அரசரையும் வணிகரையும் சுட்டிக்காட்டிய நுட்பத்தைப் போல் இந்நூற்பாவிலும் கடைசியில் வைத்த வேளாளரைக் கீழோர் எனவும் மேலேவைத்த ஏனைய மூவரையும் மேலோர் எனவும் குறிப்பிட்டனர் என்று கொள்ளல் பொருத்தமுடைத்தெனலாம்;

5. 5 "மேலோர் முறைமை நால்வர்க்கு முரித்தே"[25] என்ற நூற்பாவில் காணும் ,மேலார்' என்பதற்கு, 'மேல் அதிகாரப்பட்டு நின்ற' என்று பொருள் கொண்டு முந்நூற்பாச் செய்தியை இணைத்து உரை காணுவர் நச்சினார்க்கினியர்; இப்போக்கில் தொல்காப்பியர்

நூற்பா இயற்றுவது புதுவதன்று என்று புரிகிறது. எனவே இந்நூற்பாவில் பயின்றுவரும் 'மேலோர்' என்ற சொல் முன்னே சொல்லப்பட்டவர் (அந்தணர், அரசர், வணிகர்) பின்னர்ச் சொல்லப்பட்டவர் (வேளாளர்) என்று இடம் நோக்கிய கூற்றாகக் கொள்ளற்பாலது.

6. 1. 'அன்னராயினும் இழிந்தோர்க்கில்லை' [26] என்னும் நூற்பாவில் குறிப்பிடப்படும் 'இழிந்தோர்' என்பவர் ஒரு தனி வகுப்பினரா அன்றி ஏனைய குடிகளுள் தொழிலால் இழிந்தவரா என்பது ஐயத்திற்குரியதென்று கருதுகிறார் திரு. நா. வரதராஜலு நாயுடு அவர்கள். [27] ஆசிரியர் தொல்காப்பியனார். 'ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே' [28] என்னும் நூற்பாவில் செல்வத்தாலும் வயதாலும் குறைந்தவனையே 'இழிந்தோன்' என்று குறிப்பிடுவதனால் 'இழிந்தோர்' என்போர் தனி வகுப்பினர் அன்று எனக் கருதலாம்.

6. 2 தொல்காப்பியனார், வணிகரும் வேளாளரும் குறுநில மன்னர் ஆவதற்கும் அரசனால் வழங்கப்படும் வில், வேல், கழல், கண்ணி, தார், ஆரம், தேர், வாள், முதலிய பொருள்களைப் பெறுவதற்கும் தகுதியும் உரிமையுமுடையவர்கள் என்பதைக் கீழ்வரும் நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார்.

வில்லும் வேலும் கழலும் கண்ணியும்
தாரும் ஆரமும் தேரும் வாளும்
மன்பெறு மரபின் ஏனோர்க்கு முரிய[29]

இந்நூற்பாவிற்கு அடுத்ததாகவே 'அன்னராயினும் இழிந்தோர்க்கில்லை' என்னும் நூற்பாவை அமைத்துள்ளார். ஆகவே. 'இழிந்தோர்' என்னும் சொல், மன்பெறு மரபினராயினும். அவர்களுள்ளும் பண்பால், படைத்திறத்தால், படிப்பால் தாழ்ந்தாரையே குறித்து நின்றது எனச் கொள்ளலாம்.

7 1 'அடிமை' என்ற சொல் புழக்கத்தில் இருந்ததைச் சொல்லதிகாரம் கிளவியாக்கம் பகுதியுள் 57ஆம் நூற்பா தெரிவிக்கிறது' அடிமையும் உயர்திணையாயினும் அஃறிணையாகக் கொள்ளவும்படும் என்று] ஆசிரியர் கூறுகிறார். இதனால் அடிமைகள் என்போர் அவரது காலத்திலோ அல்லது அவரது காலத்திற்கு முன்போ இருந்தார்கள் என்று உணர முடிகிறது.

7 1. 1. அடிமைகள் இருந்ததனால் ஆண்டான் இருந்தான் என்பது பெறப்படும். எனவே நிலமுதலாளிக்குள் கீழே படியாளாக (ஒப்பந்தக்கூலி வேலைக்காரன்) பணிபுரிந்தவர்களே அடிமைகள் போல நடத்தப்பட்டனர் என்று கருதலாம். இவர்கள் பிற நாடு

களில் காணும் 'சிலேவ்' (Slave) போன்றவர்கள் அல்ல எனலாம். ஏனெனில் எந்த இலக்கியத்திலும் இதற்குச் சான்று காண முடியாது ஆயினும், இவர்களைக் கொத்தடிமைகளின் மூதாதையராக எண்ணிப்பார்க்கலாம், அறியாமையாலும் நாகரிகமின்மையாலும் இவர்களைப் பொருள் படைத்தோர் நலிவுறச் செய்துள்ளனர். இதனை மெய்ப்பாட்டியலுள் வெகுளி பிறப்பதற்குரிய செயல்களில் ஒன்றாகிய 'குடிகோள்' என்பதற்கு இளம்பூரணர் கூறும் உரையால் அறியலாம் 30 குடிகோள் என்பதற்கு, '(தம்) கீழ்வாழ்வாரை நலிதல்' என்று பொருள் கூறியுள்ளதால், செல்வத்தால் உயர்ந்தவர் தங்கீழ் வாழ்வரை நலியச்செய்தனரேயன்றி குடிஇழிவால் அடிமைப் படுத்தினர் இல்லை என்பது புலனாகிறது.

7. 2. அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்
கடிவரை இலபுறத் தென்மனார் புலவர் 31
ஏவல் மரபின் ஏனோரும் உரியர்
ஆகிய நிலைமை அவரும் அன்னர் 32

என்னும் நூற்பாக்களால் ஆண்டானும் அத்தொழிலாளரும் இருந்த செய்தியை அறிகிறோம். ஆகவே, இவர்கள் பொருளாதாரத்தில் இழிந்தவரேயன்றிக் குடியால் இழிந்தவரன்று என்பது தெளிவாகிறது.

7. 2. 1. திறமையுடையார்க்கே செல்வம் சேரும். அது வில்லார் செல்வந்தர் ஆகார். திறமையும் திறமையின்மையும் எல்லா மக்களுக்கும் பொது. எனவே எல்லா மக்களிலும் ஏழையும் பணக்காரரும் இருப்பர். அனைத்து மக்களிலும் ஆண்டான் அடிமை தோன்றுவர். ஆதலால் தொல்காப்பியம் சுட்டும் அடியோரும் வினைவலரும் குடியால் தாழ்ந்தவர் இவர் என்பது பெறப்படும்.

8. 0' கல்வி, ஒழுக்கம், புலமை திறமை, பண்பாடு, செல்வம் இவற்றால் சிறந்தோரே தொல்காப்பியரால் உயர்ந்தோராய்ப் போற்றப்பட்டவர், அறியாமை, செல்வம் வறுமை முதலியவற்றால் ஏற்பட்ட ஆண்டான் அடிமை முறையால் தாழ்ந்தோரே தொல்காப்பியரால் இழிந்தோராய்க் கூறப்பட்டவர். இவ்விரண்டு முடிபுகளும் இக்கட்டுரையின் பயன் என்பதை இதுகாறும் கண்ட விளக்கத்தால் அறிந்தோம்.

அடிக் குறிப்புகள் :—

1. தொல். பொருள்., இளம்., நூ. எ. 28, 33, 36, 115, 169, 213, 638,

2. தொல். சொல், இளம்., நூ. எ. 51.

3. தொல். பொருள்., இளம்., நூ. எ. 85.

4. தொல். சொல்., இளம்., நூ. எ. 439.

5. இளம்பூரணர் உரை: தொல்., பொருள்: நூ. எ. 28, 33, 36, நச்சினார்க்கினியர் உரை: தொல். பொருள்., நூ. எ. 26, 31; பேராசிரியர் உரை: தொல். பொருள்., நூ. எ., 636, 639.

6. தொல். பொருள்., இளம்., நூ. எ. 28.

7. தொல். பொருள்., இளம்., நூ. எ. 136.

8. தொல். பொருள். இளம்., நூ. எ. 626.

9. தொல். பொருள். இளம்., நூ. எ. 527—3.

10. தொல். பொருள், இளம்., நூ. எ. 32.

11. தொல். பொருள்., இளம்., நூ. எ. 33.

12. தொல். பொருள், இளம், நூ. எ. 74—5, 16.

13. தொல். பொருள்., இளம்., நூ. எ. 81—2, 226—3.

14. 'என்ப', 'மொழிப' என்னும் சொற்கள் இடம்பெறும். நூற்பாக்களால் ஆசிரியர்கள் இருந்தனர் என்று எண்ணலாம்.

15. தொல். பொருள்., இளம்., நூ. எ. 75—15, 144—15.

16. தொல். பொருள்., இளம், நூ. எ. 148—16.

17. தொல். பொருள்., இளம்., நூ. எ. 36.

18. தொல். பொருள்., இளம்., நூ. எ. 31.

19. தொல். பொருள்., இளம்., நூ. எ. 142.

20. இந்நூற்பாவிற்குரிய இளம்பூரணர் நச்சினார்க்கினியர் உரைகளைக் காண்க.

21. மறைமலையடிகள், வேளாளர் நாகரிகம் (கழகம், சென்னை, 1963), 2ஆம் பதிப்பு, பக். 29.

22. சி. இலக்குவனார், தொல்காப்பிய ஆராய்ச்சி (வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1971), 2ஆம் பதிப்பு பக். 180

23. ஆரிய நால்வருணத்தில்சூத்திரர் என்னும் பிரிவிற்குள் உழவர்உள்ளிட்ட ஏனைய தொழிலாளர்களும் அடங்குவர். அதாவது பிராமணர், சத்திரியர், வைசியர் தவிர்த்து ஏனைய

எல்லா மக்களையும் சூத்திரர் என்பர். ஆனால் தொல்காப்பியர் உழவரைத் தவிர்த்துப் பிற உழைப்பாளரை வேளாளப் பகுப்பில் அடக்காமல் தேரோர், பாகர், பொருநர், பாணர், கூத்தர், நோய் மருங்கறிஞர், அறிவர் தாபதர் போன்ற ஏனைய பிரிவினரும் சமுதாயத்தில் இயங்கினர் என்பதைத் தனித்தனியே அங்கங்கே எடுத்துக் காட்டிச்செல்லுகிறார் இப்பிரிவினர் அனைவரும் வேளாளப் பிரிவினருக்குள் அடக்கம் எனக் கருதியிருப்பின் தனித்தனிப் பெயர்களால் தனித்தனியே எடுத்துக் கூறியிருக்க மாட்டார், மாறாக வேளாளர் என்றே கூறியிருப்பர் மேலும் ஆசிரியர் வேளாளரைச் சூத்திரர் என்று கருதியிருந்தால் வேளாளர் என்ற சொல்லுக்குப் பதிலாகச் சூத்திரர் என்றே நேராகக் கூறிருப்பர் என்பது திரு. மறைமலையடிகளாரின் கருத்துமாகும். ஆகவே, தொல்காப்பியர் வேளாளரைச் சூத்திரர் எனக் கருதினர் எனல் உண்மையாகா எனலாம்,

24 தொல். பொருள்., இளம்., நூ. எ. 621,

25. தொல். பொருள்., நச்சர்., நூ. எ. 29.

26. தொல். பொருள்., இளம்,, நூ. எ. 629.

27. நா. வரதராஜலு நாயுடு. சங்க இலக்கியத்தில் சாதிகள். புலமை, பல்கலைக் காலாண்டு இதழ், தொகுதி — 3, பகுதி—1, (சென்னை, 1977), பக். 50.

28. தொல். சொல், இளம்., நூ. எ. 439.

29. தொல் பொருள்., இளம்:, நூ. எ 628.

30. தொல். பொருள், இளம்., நூ. எ. 254

31. தொல். பொருள்., இளம்., நூ. எ. 25

32. தொல். பொருள்., இளம்:, நூ. எ. 26

சுருக்கக் குறியீட்டு விளக்கம்;

தொல் — தொல்காப்பியம்,
பொருள் — பொருளதிகாரம்
இளம் — இளம்பூரணம்
நச்சர் — நச்சினார்க்கினியர்
நூ. எ. — நூற்பா எண்
பக். — பக்கம்

சிலம்பியம்

சி. கோ. தெய்வநாயகம் M. A., M. Phil,

சிலப்பதிகாரத்தின் முப்பது காதைகளுள் மங்கல வாழ்த்துப் பாடல், கானல்வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, ஊர்சூழ்வரி, துன்பமாலை, வஞ்சினமாலை, குன்றக்குரவை, ஆகிய எட்டுப் பகுதிகளும் 'காதை' என்ற முடிவுகொள்ளாதுள்ளன,

பாடல் என்ற முடிபுடன் ஒன்றும், வரி என்ற முடிபுடன் மூன்றும், குரவை என்ற முடிபுடன் இரண்டும், மாலை என்ற முடிபுடன் இரண்டும் ஆக இத்தலைப்புக்கள் விளங்குகின்றன. ஏனைய இருபத்திரண்டு, தலைப்புக்களும் 'காதை' என்ற முடிபு கொண்டுள்ளன. இவ்வேறுபாட்டிற்கு விடை காண முயல்வதே இவ்வாய்வுரை.

முதற்கண், 'பாட்டுடைச் செய்யுள்' என்பதன் பொருள் காணவேண்டும். 'பாட்டுடைச் செய்யுள்' [1] என்றலின் பாட்டு செய்யுளகத்து இடம் பெற்றமை பெறப்படும். 'உரையிடையிட்ட பாட்டு' [2] என்றலின் இப்பாடற்கு இடையே; பாடலின்கண் உரை இடம் பெற்றமை போதரும். ''உரையிடையிட்ட பாட்டு''டைச் செய்யுள் [3] என்றலின் உரையினை இடைஇடையே பெற்றபாடல் களைக் கொண்ட செய்யுள்களால் — தொடர்நிலைச் செய்யுளால் ஆகியதே ''சிலப்பதிகாரம்'' என்பது புலனாகும். இதுகுறித்தே அரும்பதவுரைகாரரும், அடியார்க்கு நல்லாரும் கீழ்வருமாறு பொருள் காட்டுகின்றனர்

பாட்டுடைச் செய்யுள் (சில—பதி: 60)

'உருவாகிய பாட்டுக்களை உடைய காப்பியம்'' [4]

(அரும்பதவுரை)

'' பல பாக்களோடு உரைப்பாட்டையும், இசைப்
பாட்டையும் உடைய இயலிசை நாடகப்
பொருட் டொடர் நிலைச் செய்யுள் '' [5]

(அடியார்க்கு நல்லார்)

உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்,

(சில — பதி:77)

''பாட்டும் உரையும் கலந்து வந்த காவியம்?''

(அரும்பதம்)

"உரையிடை யிட்டனவும் பாட்டுடையளவுமாகிய
செய்யுளை அனைத்துடன் காதையோடு
இவ்வாறைந்தும் உரையிடையிட்ட பாட்டுடைச்
செய்யுளென்க"[7]

(அடியார்)

ஈண்டு பாட்டு என்பதற்கு இசைப்பாட்டு, உரைப்பாட்டு என்ற இருதிறப்பகுப்பு விளக்கம் பெறப்பட்டது. செய்யுள் என்பதற்கு அரும்பதவுரைகாரர் காவியம் என்றும் அடியார்க்கு நல்லார் "இயலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுள்" என்றும் விளக்கம் கண்டனர். செய்யுள் என்ற பாவமைதிதான் காதை எனப் படும் என்ற கருத்தினை அடியார்க்கு நல்லார்,

"இனி இதன் செய்யுள் காதையென்று வழங்குதலிற் கதையையுடையது காதையாமாகலின் ஆசிரியம், வெண்பா, வெண் கலிப்பாவென்னும், இவற்றோடு சிறுபான்மையான் ஒருசார் கொச்சகக்கலி மயங்கி வருதலானும், காண்டமெனக் குறிபெறு தலானும், அதனைக் காதையென்றல் வலிவுடைத்தென்பார்க்கு, அற்றன்று, கதையென்பது பொய்ப்பொருள் புணர்த்துக் கூறுவது. என்னை? 'கதையெனக் கருதல் செய்யான் மெய்யெனத் தானுங் கொண்டான்' என்றமையானும், வழங்கினுள்ளும் இஃது ஒரு கதையென்பவாகலானும் நாடகக்காப்பியம் என்றலானும் கதையென்பது அல்லது[9] என விளக்குவார். மேலும் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்தான் காப்பியம் எனப்படும் என்பதனையும் அவரே,

"இனி. அது நல்ல புலவராற் பொருளொடு புணராப் பொய்ம்மொழியால் நாட்டப்பட்டு வருவதாகலின், இஃது அவ்வாறன்றி. யோனி யென்னும் நாடகவுறுப்பும் நாடகமுந் தழுவி, உள்ளோன் தலைவனாக, உள்ளதொரு பொருண்மேல் சித்தரிக்கப் படாது பட்டாங்கு கிளந்து பலவினப் பட்டான் வருதலின் ஈது அன்னதன் றென்பார்க்குக் காப்பியமென்றலுமாம்."[9]
என விளக்குகின்றார். இதனால் அடியார்க் நல்லார்

1. சிலப்பதிகாரம் ஒரு கதையல்ல; கதை என்பது பொய்ப் பொருள் புணர்த்துக் கூறுவது.
2. உள்ளோன் தலைவனாக உள்ளதொரு பொருண் மேல் உரைக்கப்படும் நாடகக்காப்பியம் சிலப்பதிகாரமாகும்,
3. வழக்கினுள்ளும் சிலப்பதிகாரம் ஒரு வரலாற்று நாடகக் காப்பியமாகவே உரைக்கப்படுகிறது.

என்ற கருத்துக்களை புலனாக்குகின்றார்.

ஆதலின் கண்ணகி—கோவலன் வரலாற்றினை இளங்கோவடிகள் கூத்து எனப்படும் கலை இலக்கியமாக, உரையிடையிட்டதாக, பலவினப்பாட்டான் ஆகிய காப்பியமாகவே செய்திருந்தார் என்பது அடியார்க்கு நல்லாரின் துணிபு,[10] உரை, பாடல்கள், ஆடல்கள், கதை, வரலாறு, மெய்ப்பாடு, உரையாடல், காட்சிகள் முதலியன பண்டைக் கூத்தின் அடிப்படை உறுப்புகள் ஆகும். இவ் வகையின் சிறந்த படைப்பே சிலப்பதிகாரம்.

இனி காதை என்ற முடிபு பெறாத எட்டு பகுதிகளை ஆயலாகும்.

மங்கல வாழ்த்துப் பாடல் எனும் 'பாடல்' எனும் உறுப்பிற்கு அரும்பதவுரைகாரர் 'கலியாண வாழ்த்து' என உரை கூறுகின்றார்[11] அடியார்க்கு நல்லாரோ, 'மங்கலம், கலியாணம். இதனை மங்கலவாழ்த்துக் காதையுமென்னாது பாடலு மென்ற தென்னையோவெனின் — இஃது ஆசியப் பாவால் வாராது கொச்சகக் கலியால் வருதலானும் கதையையுடையது காதையாமாகலானும், அவ்வாறு இதிற் கதை நிகழ்ச்சி இன்மையானும், வாழ்த்தும் உரையும் பாடலுமாய் வருதலானும் இங்ஙனம் பெயர் கொடுத்தாரெனவுணர்க.

அஃதற்றாக, மேலும் கானல்வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, துன்பமாலை, ஊர்சூழ்வரி, வஞ்சினமாலை, குன்றக் குரவை, இவையிற்றையும் காதையென்றிலராலெனின் அவற்றைக் கூறாததும் சில வேறுபாடுகள் கருதிப் போலும்,[12] என உரைக்கின்றார்.

இளங்கோவடிகள் தங்காப்பியத்தில் இவ்வாறு வேறுபட்ட தலைப்புக்களை இடுதற்கான காரணங்களாக அடியார்க்கு நல்லார்

1. ஆசிரியப் பாவான் வருவதே காதை
2. கலிப்பாவினங்களாக வருவன அனைத்தும் பாடல்களே.
3. காதை புலவர்களால் புனையப்படுவது.
4. பாடல்கள் மக்கள் வாழ்வியலில் படைப்பது.
5. காதை கற்றாரிடை நிலவுவது. சிறுபான்மையது.
6. பாடல்கள் கற்றாரும் கல்லாதாரும் வழங்குவது. பெரும்பான்மையது.
7. கதையைக் கூறுவது காதை.

8. கதையல்லாத வாழ்வின் நிகழ்ச்சிகளை (வரலாறு) வாழ்த்து, மெய்ப்பாடு, உரையாடல், அறிவுரை, மகிழ்வுரை, துன்பநிலை, அவலம் முதலியவற்றைப் பட்டாங்கு கிளத்தலே பாடல்கள்.

9. பாடல்கள் இருவகைப்படும் 1. இசைப்பாட்டு 2. உரைப் பாட்டு.

10. காதையின் ஒரு கூறாகவே இப்பாடல்கள் உணர்த்தும் வாழ்த்து, மெய்ப்பாடு, உரையாடல், அறிவுரை, மகிழ்வுரை, முதலியன இடம் பெறுகின்றன. இவ்வமைப்பே பாட்டுடைச் செய்யுள் என்பதாகும்.

11. பாடல்களின் நடுவே உள்ளுணர்வு விளக்கமாக 'உரை'யும் இடம்பெறும். அதுவே உரையிடையிட்ட பாட்டாகும்.

12. சிலப்பதிகாரம் செய்யுளிடைப் பாடல்களையும், அப்பாடல் களிடை உரையினையும் கொண்ட பாவமைப்பு பெற்ற நிலையில் "உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக" விளங்குகின்றது. காப்பியம் — முதற்காப்பியம் என்று போற்றப்படுகின்றது.

ஆதலின் காப்பிய அமைதிக் கேற்பவே; அஃதாவது சிலப்பதிகார நூலியற்பிற்கேற்பவே அடிகள் இது போன்ற பாடல், வரி, மாலை, குரவை, காதை முதலிய உறுப்புக்களையும் வெளிப்படக் கிளந்து தாம் சூளுரைத்த

"சூழ்வினைச் சிலம்பு காரணமாக
நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்"

என்ற மொழியினை நிலைநாட்டியுள்ளமை புலனாகும். ஈண்டடிகள் தாமோர் பாட்டுடைச் செய்யுள் நாட்டப் போவதாகக் கூறுகின் றாரேயொழிய, தாமோர் பாட்டுடைக் காதையினையோ, பாட்டு டைக் கதையினையோ, அன்றி பாட்டுடைக் காப்பியந்தினையோ நாட்டப்போவதாகக் கூறிற்றிலர். ஆதலின் பதிகத்தின் பாட்டுடைச் செய்யுள் எனும் தொடரின் 'செய்யுள்' என்ற சொல் காப்பியம் என்ற பொருளில் ஆளப்பட்டமை போதரும். சிலப்பதிகாரச் செய்யுள் சிறந்தது பாடல்களாலேயே. ஆதலின் பாடற்களாற் சிறந்த செய் யுளின் இயல்பிற்கேற்ப, பாடற்பெயர்களிலேயே பகுப்புக்களை (காதைகள்) படைத்திருக்கின்றார் இளங்கோவடிகளார். அவ்வகை யினாற்றான், சிலம்பின் முதற்காண்டத்தின் முதற்பகுப்பே 'மங்கல வாழ்த்துக் காதை' என்றில்லாது, மங்கல வாழ்த்துப் பாடல் என்றுள்ளது.

இளங்கோவடிகளின் இம்மனக் குறிப்பினை நன்கு உணர்ந்த நிலையிலேயே அடியார்க்கு நல்லார், ஏனைய வரி, குரவை, மாலை ஆகியனவும் சிறந்த பாடல் வகையினவே என உரைகாண்கின்றார், அவ்வுரைவழி வரிப்பாடல்கள் —

கானல் வரி.

கோவலனும் மாதவியும் கழிக்கானலிடத்து யாழ்ப்பாட்டு நிகழ்த்திய கானல்வரி,

இஃது இசைப்பாவாற் பெற்ற பெயர். இதனுள்ளும் கதை நிகழாமையுணர்க.

வேட்டுவ வரி.

வேட்டுவ மகளாகிய சாலினி கொற்றவை உருக்கொண் டாடிய கோலச்சாரியும்,

'இருவகை, பல்வகை என்னும் விலக்கோ டரியவுறுப்புப் பதினோராட்டுக்—குரவை வரி சொக்க மவிநய நாடகமென்றிவற் றார் றக்கவரனே யசடலரசன்' என்றமையின் வரி என்பது கோலச்சாரி; இது வேட்டுவ மகளாகிய சாலினி கொற்றவை உருக்கொண்டு அடுதலின், கொற்றவைகொண்ட வணிகொண்ட நின்றவிப் பொற்றொடி மாதர் தவமென்னை கொல்லோ' என்பது னாலறிக', கூத்துள் படுதலின் நாடகவழிப் பெயராய், வேட்டுவ வரி நிகழ்தலின் இது வேட்டுவ வரி யாயிற்று.

ஊர்சூழ் வரி:

கண்ணகி ஊர்சூழ வருவதனைப் பத்தினிப் பெண்டிர் கண் கூடாகக் காண்டலின் இஃது ஊர்சூழ் வரி என்பதாயிற்று. இதுவும் கூத்தாற் பெற்ற பெயர். ''

இம்மூன்று வரிகளையும் மூவகைப் பாடற் பிரிவுகளாகவே அடியார்க்கு நல்லார் கொண்டுள்ளார்,

முதலாவது யாழ்ப்பாட்டு — (கானல்வரி)
இரண்டாவது வேடப் பாட்டு (ஒப்பனைப் பாட்டு) } (கோலச்சரரி— வேட்டுவ வரி)
மூன்றாவது காட்சிப்பாட்டு — (ஊர்சூழ்வரி)

இதனால்

1. பாடல் பல்வகைத்து
2. அதனுள் வரி என்பது மொன்று
3. வரிகளும் பல்வகைய
4. பாடல் வகைத்தாதலின் வரிகள் கதை கூறா.
5. உரையாடலையும், நிகழ்ச்சியினையும்: காட்சியினையும், பட்டாங்கு கிளத்தலே வரியின் இயல்பு என்ற கருத்துக்கள் பெறப்படுகின்றன.

(தொடரும்)